## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

---

*[1992, நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1992, நவெம்பர் 06 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 80 தபாற் செலவு : ரூபா 1.00

## 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

[1992, நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 23/91
3056

**1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுச் சட்டம், அதன் 39 ஆம் பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுவதன் மூலம், இத்தால் திருத்தப்படுகிறது:— 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அவற்றின் ஊழியர்களுக்கும் கைத்தொழில் பிணக்குச்சட்டம் ஏற்புடைத்தாதல்.

39. (1) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு தொழில் நியாயசபை, அச்சட்டத்தின் 31ஆ என்னும் பிரிவின்கீழ் ஓர் ஊழியரினால், ஏதேனும் விடயம், தொழில் நிவாரணத்திற்காக அல்லது பரிகாரத்திற்காக அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றை அதேவிடயம் அல்லது பொருளளவில் அத்தகைய தொடர்பில் ஆணைக் குழுவிற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருப்பின் ஏற்றுக் கவனித்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது ஓர் ஊழியரினால் செய்யப்படும் ஏதேனும் விடயம் தொடர்பிலான மேன்முறையீட்டை, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு தொழில் நியாயசபைக்கு அச்சட்டத்தின் 31ஆ என்னும் பிரிவின்கீழ் அதேவிடயம் தொடர்பில் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டிருப்பின், ஏற்றுக் கவனித்தல் ஆகாது.".

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.